**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02 - 2018**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3029- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 3030- எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு மற்றும் செயற்திட்ட நிர்வாக கைநூலின் V ஆம் அத்தியாயம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்பொதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களாலும் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தாலும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது அதேநேரம் கொழும்பு மாநகர சபை மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளை கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்**

---

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள்

எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வு சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இந்த நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபையால் அமுலாக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 02 என அமைழக்கப்பட்ட வேறு செயற்திட்டம் என்பவற்றிலிருந்து கடனளிக்கும் முகவரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 157.58 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 997,059 கூட்டுத்தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் பிரிக்கப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணத்தின் குறைத்துக் கூறல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அறிவுறுத்தப்பட்டவாறு வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களிற்கு குறிப்பகளாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் பிரிக்கப்படுவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் முறையான பொறிமுறை எதுவும் ஈடுபடுத்தப் பட்டிருக்கவில்லை. | பொதுத் திறசேரியின் உடன்படிக்கையின் முறையான பொறிமுறை அபிவிருத்தி செய்யப்பட வெண்டும். உரிய கிரயம் பிரிக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கடன் தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 4.92 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 27,340 ஆன நெரடிக் கொடுப்பனவகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | நடைபெறும் வெலை மற்றும் பெறப்பட்ட கடன் பெறுகைகள் குறைத்துக் கூறல் | தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடனளிக்கும் முகவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்களுடன் இணக்கம் செய்வதற்கான தேவை. |
| (இ) | 2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 182.41 மில்லியன் தொகையான பெறுமதி செரி வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகள் குறைத்துக் கூறல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மொத்த பங்களிப்பகள் பொதுத் திறைசேரியின் பதிவேடுகளுடன் இணக்கம் செய்வதற்கு இயலக்கூடியவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வெண்டுமென வேண்டப்பட்டது. |
| (ஈ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கைகளில் காட்டப்பட்ட 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித் திட்டத்தால் செய்யப்பட்ட ரூபா 215.39 மில்லியன் தொகையான மொத்த கைதவிர்ப்புகள் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 217.14 மில்லியன் தொகையான நேரொத்த தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை. | இணக்கம் செய்யப்படாத மீதிகள் | திறைசெரி அறிக்கைகள் நாளதுவரையாக்க காலம் எடுத்தமையால் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் பதிவேடுகள் நிலவிய நாணய மாற்று வீதங்களை பயன்படுத்தி நாளது வரையாக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் காலரீதியாக பொதுத் திறசெரியின் தகவல்களுடன் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் கிடைத்த தொகையுடன் இணக்கம் செய்வதற்கு தேவைப்பட்டது. |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வு சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் பிரகாரம், சான்றுபடுத்திய விலைப்பட்டியல் 56 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைப்பட்டியல் தீர்ப்பனவிலுள்ள தாமதம் காரணமாக ஒப்பந்தகாரர் ரூபா 19.67 மில்லியன் கோரிக்கைகளும் ஐ.அ.டொலர் 78,934 மேலதிக நிதிக்கட்டணமாகவும் கோரிக்கை செய்திருந்தார். | நிதி முகாமைத்துவம் நலிவாக உள்ளது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய திகதிகளில் விலைப்பட்டியலை தீர்ப்பனவு செய்வதற்கு பொறி முறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.3 ஆம் பந்தியின் பிரகாரம், தலவளவில் பயிற்சி நிலையத்திற்கான விடுதிகள் மற்றும் சிற்றூண்டிச்சாலைக்கான கட்டிடம் நிர்மாணம் மீதான மாதிரி ஒப்பந்த உடன்படிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைவரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | கையொப்பமிட்ட சட்டரீதியான ஆவணங்கள் ஐயத்திற்கிடமாக உள்ளது. | -மேற்படி- | ரூபா 500 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியான ஒப்பந்தங்களின் மாதிரி உடன்படிக்கைகள் உரிய அமைச்சு செயலாளரால் கையொப்பமிடப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கொழும்பு நகரத்தின் தெற்கு மற்றும் மேல் பிராந்தியங்களில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை புனரமைப்பு, மஹரகம மற்றும் பாமன்கடையில் அப்பகுதி பொறியியலாளர் அலுவலக கட்டிட முன்னேற்றம் மற்றும் நிர்மாணம், மத்திய பயிற்சி நிலையத்தின் புதுப்பித்தல், எல்கவுஸ் நீர்த்தேக்க வளவில் உத்தேசிக்கப்பட்ட நீரிறைக்கும் இல்லங்களின் சிவில் வெலைகள் போன்ற கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. இது தொடர்பில் பின்வரம் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வு சிபார்சுகள் |
|---|---|---|---|
| கொழும்பு நகரத்தின் தெற்கு பிரந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தம் 2017 சனவரி 10 இல் வழங்கப்பட்டதுடன் 206,166 மீற்றர் குழாய்கள் பொருத்துவதன் மூலம் 2021 யூன் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் 23 மீற்றரிடல் மாவட்ட பகுதியகிளல் 33,236 வீட்டுரிமையாளர்களிற்கு இணைப்புக்களை வழங்குதல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மேலும், கொழும்பு நகரத்தின் மேல் பிரந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்த வேலைகள் 2021 திசெம்பர் 23 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் மேற்கு பிராந்தியத்தில் 18 மீற்றரிடல் மாவட்ட பகுதிகளில் 117,915 மீற்றர் குழாயிடல் வேலைகளில் 29,993 மீற்றர் குழாயிடல் வேலைகள், 29,343 சேவை | ஒப்பந்தங்களின் பூர்தியாக்கலில் தாமதத்தின் சாத்தியம் | ஒப்பந்தங்களின் கீழான வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கும் அவற்றின் கண்காணிப்பு பொறிமுறையை வலுப்படுத்தவதற்கும் ஒப்பந்தகாரர்களிற்கு செல்வாக்கை பிரயோகிப்பதற்கான தேவை. |

மாற்றங்களில் 36 சேவை மாற்றங்கள் என்பன மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. வீதி வேலைகளிற்காக கொழும்பு மாநகர சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிடமிருந்து அனுமதிகள் பெறுவதற்கு எடுத்த காலம், இயந்திரங்களிற்குப் பதிலாக தொழிலாளரை பயன்படுத்தல் மற்றும் எதிர்பாராதவிதமாக கண்டுபிடிக்கப்பட்ட நிலப் பயன்படுத்தல்கள் என்பன மேற்குறிப்பிட்ட வேலைகளின் தாமதங்களை விளைவித்தது. ஆகவே, 32,352 மீற்றர் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு தெற்கு பிராந்தியத்தில் 1,346 வீட்டுரிமையாளர்களிற்கு நீர் வழங்கல் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும், கொழும்மு தெற்கு பிராந்தியத்தில் 11 மீற்றரிடல் மாவட்டங்களிற்காக 99,021 மீற்றர் குழாயில் வேலைகள் மற்றும் கொழும்பு வடக்கு பிராந்தியத்தில் ஒரு மீற்றரிடல் மாவட்டத்தில் 5,139 மீற்றர் குழாயிடல் வேலைகள் வேறு மீற்றரிடல் பகுதிகளில் வேலை செய்வதற்கு வழங்கப்பட்ட முன்னுரிமைகள் காரணமாக 2019 மே 15 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 குறைவாக பயன்படுத்திய வளங்கள்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வு சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 10,394 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 79.95 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் செயற்திட்டத்தின் மொத்த 60 மாதகாலப் பகுதியில் 54 மாத காலப்பகுதி கடந்த பின்னர் 23.07 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,053.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18.45 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | கடப்பாட்டு கட்டண அறவீட்டின் நிகழ்தகவு. | 04 ஆண்டு காலமாக பிரதான ஒப்பந்தங்கள் கொள்வனவு நடைமுறையிலுள்ள தாமதம் காரணமாக 2017 இல் தொடங்கப்பட்டிருந்தது. எனவே, எவ்வித கைதவிர்ப்பும் இல்லாமல் 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கும் முடிவுறுத்துவதை கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காணியொன்றை சுவீகரிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2015 செப்தெம்பர் 02 இல் செயற்திட்டத்தால் ரூபா 10 மில்லியன் முற்பணம் செலுதுதப்பட்டிருந்தது. பின்னர், செலுத்தப்பட்ட ஆரம்ப முற்பணத்தை கருத்திற்கொள்ளாமல் 2017 ஆகஸ்ட் மாதமளவில் கொழும்பு மாநகர சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 ஏப்ரல் 30 வரையும் செய்யப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 3 ஆண்டுகளிற்கு மேலாக செயற்திட்ட நிதிகள் பயனற்ற செலவினமாக இருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நியாயமான வட்டியுடன் முற்பணத்தை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |